(சுருக்கம்)

திருத்திய ஊதிய விகிதங்கள், 2009 – வருவாய்த்துறை உள்ளிட்ட அனைத்து துறை இளநிலை உதவியாளர் / தட்டச்சர்கள், உதவியாளர், சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை – III ஆகியோருக்கு ஊதிய திருத்தமும், வருவாய்த் துறையின் கீழ் பணியாற்றும் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் மற்றும் ஊரக வளர்ச்சித்துறையில் பணியாற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோருக்கு தனி ஊதியம் அனுமதித்து ஆணையிடப்படுகிறது.

---

**நிதி (ஊதியப்பிரிவு)த் துறை**

அ.ஆ. நிலை எண்:45

நாள்: 10 —2—2011.
தை, 27.
திருவள்ளுவர் ஆண்டு, 2042.

**படிக்கவும்:--**

1. அ.ஆ.நிலை எண். 234, நிதி (ஊதியப்பிரிவு) த்துறை, நாள்: 01—6—2009.
2. அ.ஆ.நிலை எண். 235, நிதி (ஊதியப்பிரிவு) த்துறை, நாள்: 01—6—2009.
3. அரசுக்கடித எண். 41530 / ஊதியப்பிரிவு/ 2009—1, நிதித்துறை, நாள்: 28—7—2009.
4. அரசுக்கடித எண். 63305 / ஊதியப்பிரிவு/10–1 மற்றும் 2, நிதித்துறை, நாள்: 08-11-2010.
5. அரசாணை நிலை எண். 610, வருவாய்த்துறை, நாள்: 19—11—2010.
6. தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் மனு நாள்: 23—12—2010, தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு காவல்துறை அமைச்சுப் பணியாளர் சங்கம் மற்றும் பிற அமைச்சுப்பணியாளர் சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள்.

\- - - - - -

**<u>ஆணை</u> :--**

அலுவலர் குழு, 2009-ன் பரிந்துரைகளின்படி அனைத்து துறைகளில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் / தட்டச்சர்கள் மற்றும் உதவியாளர், சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை—III ஆகிய பணியிடங்களுக்கு திருத்திய ஊதிய விகிதம் முறையே ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000 மற்றும் ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2400 அனுமதித்து 1-1-2006 முதல் கருத்தியலாகவும் 1-1-2007 முதல் பணப்பயன் பெறும் வகையில் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. இந்நிலையில் தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தினர் வருவாய்த்துறையில் பணிபுரியும் அலுவலர்களை சார்ந்த சில கோரிக்கைகளை முன்வைத்து அதனை நிறைவேற்றித்தருமாறு அரசுக்கு கோரிக்கை விடுத்தனர். அவ்வாறே பல்வேறு அமைச்சுப்பணியாளர் சங்கங்களும் ஆசிரியர்களுக்கு ஊதிய விகிதம் திருத்தியமைத்தும் தனிஊதியம் அனுமதித்தும் ஆணை வெளியிட்டுள்ளதனைச் சுட்டிக்காட்டி அமைச்சுப் பணியிடங்களான இளநிலை உதவியாளர் / தட்டச்சர்கள், உதவியாளர், சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை – III மற்றும் இளநிலை வருவாய் உதவியாளர், வருவாய் உதவியாளர்களின் ஊதிய விகிதங்களை திருத்தி அமைத்தும், வருவாய்த் துறையில் பணியாற்றும் துணை

/த.பி.பா/

வட்டாட்சியர், வட்டாட்சியர் மற்றும் ஊரக வளர்ச்சித்துறையில் பணியாற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு அவர்களின் பணிச்சுமை மற்றும் பணியின் தன்மையைக் கருதி தனி ஊதியம் அனுமதித்தும் ஆணைகள் வெளியிடுமாறு அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

3) தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கம் மற்றும் பிற அமைச்சுப்பணியாளர் சங்கங்களின் கோரிக்கைகளை அரசு நன்கு ஆராய்ந்ததில் முந்தைய ஊதியக் குழுக்களில் இடைநிலை ஆசிரியர்களுக்கு ஊதிய திருத்தம் அனுமதித்ததை தொடர்ந்து ஊதிய திருத்தத்திற்கு மாற்றாக அடிப்படை ஊதியத்தில் 5 சதவிகிதம் தனி ஊதியம் அமைச்சுப் பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்டது. இருப்பினும் அமைச்சுப்பணியாளர்களான இளநிலை உதவியாளர் / தட்டச்சர்கள், உதவியாளர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை – III ஆகியோரது ஊதிய முரண்பாடு களைதல் குறித்த நீண்ட கால கோரிக்கையினை ஒரு நபர் குழு பரிந்துரைக்கு பின்னர் மேற்கூறிய பணியிடங்களுக்கு சமநிலையில் உள்ள பணியிடங்களின் ஊதிய நிலையினைக் கருத்தில் கொண்டு ஏற்கலாம் என்றும் வருவாய்த் துறையில் பணிபுரியும் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் மற்றும் ஊரக வளர்ச்சித்துறையில் பணிபுரியும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு அவர்களின் பணிச்சுமை மற்றும் பணியின் தன்மையைக் கருதி தனி ஊதியம் அளிக்கலாம் என்றும் அரசு முடிவு எடுத்து அவ்வாறே மேற்கூறிய பணியிடங்களின் ஊதிய முரண்பாடுகளை களைந்து கீழ்கண்டவாறு ஊதிய திருத்தங்கள் மேற்கொண்டு அரசு ஆணையிடுகிறது :

| வ. எண் | பதவியின் பெயர் | தற்போதைய ஊதியம் ஊதிய விகிதம் + தர ஊதியம் | திருத்தியமைக்கப்படும் ஊதிய விகிதம் + தர ஊதியம் / தனி ஊதியம் |
|---|---|---|---|
| | **அனைத்து துறைகள்** | ரூ. | ரூ. |
| 1. | இளநிலை உதவியாளர் / தட்டச்சர் | 5200—20200 + 2000 | 5200—20200 + 2400 |
| 2. | உதவியாளர், சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை – III | 5200—20200 + 2400 | 5200—20200 + 2800 |
| | **வருவாய்த்துறை** | | |
| 3. | இளநிலை வருவாய் உதவியாளர் | 5200—20200 + 2000 | 5200—20200 + 2400 |
| 4. | வருவாய் உதவியாளர் | 5200—20200 + 2400 | 5200—20200 + 2800 |
| 5. | துணை வட்டாட்சியர் | 9300—34800 + 4800 | 9300—34800 + 4800 + 500 தனி ஊதியம் |
| 6. | வட்டாட்சியர் | 9300—34800 + 4900 | 9300—34800 + 4900 + 1000 தனி ஊதியம் |
| | **ஊரக வளர்ச்சித்துறை** | | |
| 7. | வட்டார வளர்ச்சி அலுவலர் | 9300—34800 + 4900 | 9300—34800 + 4900 + 1000 தனி ஊதியம் |

துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோருக்கு மேலே அனுமதிக்கப்பட்டுள்ள தனி ஊதியம் வரும் காலங்களில் ஆண்டு ஊதிய உயர்வுக்கும், அகவிலைப்படிக்கும், ஓய்வூதிய பலன்களுக்கும் கணக்கில் கொள்ளப்படும்.

4) மேற்கூறிய ஊதிய திருத்தம் 1—1—2006 முதல் கருத்தியலாகவும் 1—2—2011 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் தனி ஊதியம் 1—2—2011 முதல் பெறும் வகையிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

**/ஆளுநரின் ஆணைப்படி /**

**க. சண்முகம்,**
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள், சென்னை–9.
செயலாளர், சட்டமன்றப் பேரவை, தலைமைச் செயலகம், சென்னை–2.
ஆளுநரின் செயலாளர், சென்னை–32.
ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், கிண்டி, சென்னை–32.
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள், (அ.ந.மு / பட்டிகள்) , சென்னை – 9.
அனைத்துத் துறைத் தலைவர்கள்/ மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / மாவட்ட நீதிபதிகள்/ முதன்மை நீதித்துறை மாஜிஸ்திரேட்டுகள்.
மாநில கணக்குத் துறைத் தலைவர், கணக்குகள் (ம) உரிமைத் தொகை, சென்னை–18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (துணிக்கை –I), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (துணிக்கை –II), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (CAB), சென்னை–9 / மதுரை.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–104.
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை–6.
தமிழ்நாட்டின் அனைத்து பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
கருவூலங்கள் மற்றும் கணக்குகள் இயக்குநர், சென்னை–15.
ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை–6.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை–108.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–6.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை–9.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், (வடக்கு/ தெற்கு / கிழக்கு ) சென்னை – 1 /35/5.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், மதுரை – 625 001.
அனைத்து கருவூல அலுவலர்கள் / அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள்.
மாநகராட்சி ஆணையர், சென்னை / மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம் / திருநெல்வேலி / தூத்துக்குடி / வேலூர் / திருப்பூர் / ஈரோடு.
அனைத்து கோட்ட வளர்ச்சி அலுவலர்கள் / கோட்டாட்சியர்கள் / வட்டாட்சியர்கள் / வட்டார வளர்ச்சி அலுவலர்கள் / நகராட்சி ஆணையாளர்கள்.
அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள்.
அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சங்கங்கள்.

**<u>நகல் பெறுவோர்:</u>**
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை—2.
மாண்புமிகு துணைமுதலமைச்சரின் செயலாளர், சென்னை—2.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை—2.
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–2

..... / 4 /

அரசு தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை—2.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், நிதித்துறை, சென்னை—9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை—9.
வருவாய்த்துறை, சென்னை—9.
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, சென்னை—9.
நிதி ( வருவாய்) / (ஊரக வளர்ச்சி) த்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

ஆராய்ச்சி அலுவலர்.